


# "மாநில சுயாட்சியை அடைவதற்கான நேரம் நெருங்கிவிட்டது!"

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க. 75 அறிவுத்திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக்கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தில் 'மொழிப்போர் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில், கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை:**

## திருச்சி சிவா எம்.பி.
### கழகத் துணைப் பொதுச் செயலாளர்

"கழகத்தின் இளைஞர் அணி, அண்ணன் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தொடங்கப் பட்டது. அன்றிலிருந்து இன்று வரை அவருடன் தொடர்ந்து பயணம்செய்பவன் நான். அவர் பாடுபட்டு வளர்த்த இளைஞர் அணி அமைப்பை, இன்றைக்கு பல லட்சம் இளைஞர்களைக் கொண்ட பட்டாளமாக மாற்றி இருக்கின்ற பெருமை, தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உண்டு.

### கோழை நாடு, இதுவல்ல!

தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்தி திணிக்கப் பட்டு, அதை எதிர்த்து, மொழிப் போர்க்களம் அமைந்தது 1938-இல். 14 வயது பாலகனாக, பள்ளி செல்கின்ற சிறுவனாக, எல்லோரும் வீதிகளில் விளையாடிக் கொண்டிருந்தபோது, தமிழ்க்கொடியை கையில் ஏந்தி, 'ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள், நீ தேடி வந்த கோழை நாடு இதுவல்ல' என்று முழங்கியவர், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள்.

1938-இல் இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கொண்டுவந்தவர் ராஜாஜி, எதிர்த்துக் களம் கண்டது தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா, மறைமலையடிகள், முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் போன்ற அறிஞர் பெருமக்களின் குழு. அந்தப் போராட்டத்தின் விளைவாக, ராஜாஜி கட்டாய இந்தியைத் திரும்பப் பெறவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். ஆனால், மீண்டும் 1948-இல் இந்தி திணிக்கப்பட்டது.

### 'தளபதி' சி.என்.அண்ணாதுரை

1948-இல் நடைபெற்ற போராட்டத்தின் தளபதியாக இருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள். அதனால், அவரை 'தளபதி' சி.என். அண்ணாதுரை என்று அழைக்க ஆரம்பித்தார்கள். அந்த நாளில்தான், கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், இன்றைய முதல்வரின் தாயார் மரியாதைக்குரிய தயாளு அம்மாள் அவர்களுக்கும் திருமணம் நடைபெற்ற நாளன்று, கலைஞர் மணமேடையில் இருந்து நேராகப் போராட்டக் களத்துக்குச் சென்றார் என்பதும் வரலாறு. உச்சக் கட்டப் போராட்டம் நடந்தது 1964-1965.

இந்த நாடு விடுதலை அடைகின்றவரை இந்தியாவின் ஆட்சிமொழி ஆங்கிலமாகத்தான் இருந்தது. அதுவரை இந்தி என்ற மொழிக்கு இங்கு வேலையே இல்லை. ஆனால், 1950-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில், அரசியல் சட்டத்தின் நிர்ணய சபையில் பல்வேறு விவாதங்கள் நடைபெற்றன. 'இந்தியாவுக்கு என்று ஒரு பொதுமொழி தேவை' என்ற விவாதம் அங்கு நடைபெற்றது.

ஒரு சிலர் ஆட்சி மொழி வேண்டும் என்றார்கள். சிலபேர் அது தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்றார்கள். ஆனால், தேசிய மொழி என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. விவாதத்தின் போது, 'இந்தி வேண்டும்' என்று சிலர், 'இந்துஸ்தானி வேண்டும்' என்று பண்டிதர் நேரு உள்ளிட்ட சிலர், 'சமஸ்கிருதம் வேண்டும்' என்று ஒரு சிலர் கூறினார்கள். 'ஆங்கிலம் வேண்டும்' என்று குரல் கொடுத்தவர்கள் இருவர்தான். ஒருவர் ஃபிராங்க் ஆண்டனி, இன்னொருவர் நசுருதீன் அகமது. இரண்டு பேரும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

### நாடாளுமன்றக் குழு

சமஸ்கிருதம் வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்துஸ்தானி வேண்டுமா, இந்தி வேண்டுமா என்பதற்கு அங்கு வாக்கெடுப்பு நடைபெற்றது. அதற்கு முன்பாகவே, காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றக் குழு என்று சொல்கிற பார்லிமென்டரி கமிட்டி, ஒட்டுமொத்தமாக இந்திதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று ஒற்றை வாக்கில் தீர்மானிக்கப் பட்டதன் விளைவு, அரசியல் சட்டத்திலும் இந்தி என்ற மொழிதான் இந்த நாட்டின் ஆட்சிமொழி என்று வருகின்ற நேரத்தில், 'இந்த நாட்டில் பல மொழிகள் இருக்கிறபோது, ஆங்கிலத்தை முற்றிலுமாக அகற்றமுடியாது. அது நமக்கு உலகளவில் தொடர்பு கொள்ளக்கூடிய மொழி' என்ற வகையில், தமிழ்நாட்டில் இருந்து சென்ற கோபாலசாமி ஐயங்கார் அவர்களும், முன்சி அவர்களும் கொண்டுவந்த ஒரு தீர்மானத்தின் அடிப்படையில், ஒரு திருத்தம் சேர்க்கப்பட்டது.



அரசியல் சட்டத்தின் 343-வது பிரிவு 'இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இந்தி இருக்கும். அது முற்றிலுமாக எல்லா மாநிலங்களிலும் நடைமுறைக்கு வரும்வரை, இன்னும் 15 ஆண்டுகளுக்கு ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடரும்' என்றது.

### 1965-இல் மாபெரும் கிளர்ச்சி

'இந்த நிலையை எதிர்க்காவிட்டால், ஆங்கிலம் அகன்றுவிடும். இந்தி மட்டுமே கட்டாய மொழியாக, ஆட்சிமொழியாக மாற்றப்படும்' என்பதை உணர்ந்து, தமிழ்நாட்டில் நடந்த போராட்டம்தான் 1964-லும், 1965-லும் கிளர்ந்தெழுந்த மாபெரும் கிளர்ச்சி.



தமிழ்நாட்டில் முதன்முதலாக இராணுவம் நுழைந்த நேரம் அந்த நேரம். கலைஞர் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்ட காலம். மாணவர்கள் அடங்க முடியாமல் கொந்தளித்து எழுந்த அந்த காலத்துக்குப் பின்னர்தான், அதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியதன் விளைவு, 1963-ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டத்தில் ஒரு திருத்தம் வந்தது. அந்தத் திருத்தத்தின் அடிப்படையில்தான், 15 ஆண்டுகள் கழித்து ஆங்கிலம் அகலும் என்பதற்கு மாறாக, ஆங்கிலமும் தொடரும் என்ற சட்டம் 1963-இல் நிறைவேற்றப்பட்டது. அதற்கு காரணம், அறிஞர் அண்ணாவும் திராவிட முன்னேற்றக் கழகமும்தான்.

அதே அரசியல் சட்டத்தின் இன்னொரு பிரிவு, 'இந்தி மொழியை வளர்ப்பதற்காக, அதை பேணிக் காப்பதற்காக, அதை மேன்மேலும் வலிமைப்படுத்துவதற்காக, குடியரசுத் தலைவர் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிமொழிக் குழு உருவாக்கப்படும்' என்றது.

ஆனால், 1967-இல் அண்ணா தமிழ்நாடு முதலமைச்சர் ஆனதும் சட்டமன்றத்தில் இருமொழிக்கொள்கை தீர்மானத்தைக் கொண்டு வந்தார். 'இந்த நாட்டில் மும்மொழிக் கொள்கை இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டில் இனிமேல் இந்தி என்ற மொழி இருக்காது. ஆட்சிமொழி தொடர்பாக நாடாளுமன்றம் இந்தி தொடர்பாக நிறைவேற்றிய எல்லா தீர்மானங்களையும் இந்த சட்டப்பேரவை நிராகரிக்கிறது' என்று அந்தத் தீர்மானம் சொன்னது.

### தனிநபர் மசோதா

'இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இருக்கிற 22 மாநில மொழிகளையும் இந்தியாவின் ஆட்சிமொழிகள் ஆக்கிட வேண்டும்' என்பது நாடாளுமன்றத்தில் அண்ணன் முரசொலி மாறன் அவர்களும் அண்ணன் வைகோ அவர்களும் கொண்டுவந்த ஒரு தனிநபர் மசோதா. அதற்கு 30 ஆண்டுகளுக்குப் பின்னால், நான் கொண்டுவந்த தனிநபர் மசோதாவும் அதேதான். ஆனாலும் தொடர்ந்து அந்த மசோதா தோற்கடிக்கப்படுகிறது.

எதிரே இருக்கும், ராணுவ வீரர்களுக்கு நிகரான இளைஞர் அணியைச் சேர்ந்த தோழர்களே! உங்களுக்குக் கடமை என்பது இந்தக் கட்சியை, ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்பது மட்டுமல்ல, இந்த இயக்கத்தின் கொள்கைகளை வென்றெடுக்க வேண்டிய கடமை உங்கள் கையில் இருக்கின்றது. நாங்கள் உங்களோடு பாடுபடத் தயாராக இருக்கிறோம். உங்களுடைய தலைவன் எதிர்காலத்தில், இந்த இயக்கத்தையும் இனத்தையும் காப்பாற்ற இருக்கிற தம்பி உதயநிதி ஸ்டாலின்.

தேர்தல் திருவிழாவிற்குப் பலர் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அறிவுத் திருவிழா என்று அறிவு கண்ணைத் திறக்கிறாரே அவர், காரணம் என்ன? அறிவு ஒளி ஏற்றினால், அறியாமை இருள் அகலும். அறிவு ஒளி ஏற்றித்தான் இந்த நாட்டிலே மடமையை அகற்றினோம். அது இருந்த காரணத்தால்தான் நாம் எவருக்கும் மண்டியிடவில்லை.

தம்பி உதயநிதி அவர்களே மீண்டும் சொல்கிறேன். உங்கள் கடமை ஒன்றுதான்! மாநிலத்தின் சுயாட்சியைப் பெற்றிட வேண்டும். அதை அடைவதற்கான நேரம் நெருங்கிவிட்டது. தமிழ்நாட்டில் இருந்து கிளம்பிய அந்தக் குரல், இப்போது இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது.

கூட்டாட்சித் தத்துவம் என்பதன் அடிப்படைத் தேவை என்ன என்பதையும், மாநிலங்களுக்கு எப்படி அதிகாரங்கள் வேண்டும் என்பதையும், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, பீகார் போன்ற மாநிலங்கள் உணர ஆரம்பித்து விட்டன. ஆனால், இவை போதாது.

உலகத்தில் 8 நாடுகளில் ஆட்சிமொழியாக இருக்கிற என் தாய்மொழி தமிழ் இந்தியாவின் ஆட்சிமொழியாக மாறியது என்ற வெற்றிச் செய்தியை, 'இந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று சொல்லிச் செத்தாரே முதல் கள சிப்பாய் சின்னசாமி, அவரின் சமாதியில் கொண்டுபோய் வைக்க வேண்டும். அது பெரியார், அண்ணா, கலைஞருக்குச் செய்கின்ற காணிக்கை. தளபதி ஸ்டாலின் அவர்களின் கனவை நனவாக்குகின்ற பெரும் வெகுமதி.

இளைஞர்களே, நீங்கள் கூடிக் கலைகிற, காகக் கூட்டம் அல்ல, கூடிப் பொழிகின்ற மேகக் கூட்டம். நீங்கள் திரண்டால், அதன் விளைவு இந்த நாட்டுக்கு நன்மை பயக்கும்.

### தம்பி உதயநிதி லட்சியவாதி!

தம்பி உதயநிதி அரசியல்வாதி அல்ல, லட்சியவாதி. சாதாரணமாகப் பதவியைத் தேடுகிற கூட்டத்தைச் சார்ந்தவர் அல்ல. இந்த இயக்கத்தின் கொள்கைகளை வலிமைப்படுத்துகிற போராளிக் கூட்டத்தின் தலைவன் என்பதை நிலைநிறுத்தி இருக்கிறார். அவர் வெற்றிபெற வேண்டும். அவர் வெற்றி பெற்றால், தமிழ்நாடு வெற்றி பெற்றதாகப் பொருள்.

### 5 ஆயிரம் ஆண்டு வரலாறு

இந்த மொழியின் வரலாறு, நம் நாட்டில் இருக்கின்ற இளைஞர்களுக்குத் தெரிந்தாக வேண்டும். ஆங்கிலம் தோன்றியது பத்தாவது நூற்றாண்டில், பிரெஞ்சு மொழி தோன்றியது 8-வது நூற்றாண்டில், சீனமொழி எல்லாவற்றுக்கும் முந்தைய மொழி, வழக்கொழிந்துபோன மொழிகளில் கிரேக்கமும், லத்தீனும், ஹீப்ரூவும், சமஸ்கிருதமும் உண்டு. எந்நாளும் இளமை குன்றாமல் இருக்கின்ற நம் தாய்மொழி தமிழ், ஐந்தாயிரம் ஆண்டுகளைக் கடந்த வரலாற்றுக்குச் சொந்தமான மொழி.

அதை அழிப்பதற்கு, ஆக்கிரமிப்பதற்கு, அகற்றுவதற்கு, வேறொரு மொழி முயலுமேயானால், யாராவது அதற்குத் துணை நிற்பார்கள் என்றால், அவர்களைத் தடுத்து நிறுத்துகிற கேடயமாக தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகமும், அதன் பட்டாளத்து சிப்பாய்களும் இருப்பார்கள்."

●

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

***'தி.மு.க.75: இந்த உரையாடல் அவசியமானது!' என்ற தலைப்பில், விகடன் இணையதளத்தில் வெளியான கட்டுரையில் இருந்து...***



'தன்மானம் காக்கும் கழகம்' என்னும் நாடகம், புத்தர், பெரியார், அம்பேத்கர் தொட்டு, பலரையும் பேசி சமகால அரசியலைப் பகடி செய்து முடிக்கிறது. தி.மு.க.வின் இளைஞர் அணி ஏற்பாடு செய்திருக்கும் தி.மு.க. பவள விழா அறிவுத் திருவிழாவின் தொடக்க விழாவில், திணை நிலவாசிகள் குழு அரங்கேற்றிய நாடகம் இது. அன்று மட்டுமல்ல, அன்று தொடங்கி ஒரு வாரமாகக் கலை இலக்கிய நிகழ்ச்சிகளோடு 'முற்போக்கு புத்தகக் காட்சி' என்ற ஒன்றையும், வள்ளுவர் கோட்டத்தில் நடத்திக் கொண்டிருக் கின்றனர்.

தி.மு.க.வின் இளைஞர் அணி ஏற்பாடு செய்திருக்கும் 'அறிவுத்திருவிழா' கவனத்தை ஈர்க்கிறது. 1,500 பேர் அமரக்கூடிய கருத்தரங்கம் அது. முழுக்கவும் இளைஞர் அணி உறுப்பினர்களால் அரங்கம் நிறைந்திருந்தது.

கருத்தரங்கை முடித்துவிட்டு, புத்தகக் கண்காட்சிக்குச் சென்றிருந்தேன். 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என உதயநிதியின் மேற்பார்வையில் தி.மு.க. பவள விழாவுக்காகக் கட்டுரைத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். சோனியா காந்தி, ராகுல் காந்தி, தேஜஸ்வி, அகிலேஷ், அர்விந்த் கெஜ்ரிவால் எனப் பல அகில இந்தியத் தலைவர்களும் அந்தப் புத்தகத் திற்காகக் கட்டுரை கொடுத்திருக் கிறார்கள். பெரியாரிய, அம்பேத்கரிய ஆய்வாளர்கள், பத்திரிகையாளர்கள் பலரும் தி.மு.க. குறித்து கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதைப் பார்க்க முடிந்தது.

'சமீபமாகத்தான் வாசிக்க ஆரம்பித்திருக்கிறேன்; அண்ணாவினுடைய நாடகங்கள், இந்தியாவின் ஜாதிய சமூகம் பற்றிய அம்பேத்கரின் புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்திருக்கிறேன். கலைஞரின் நாடகங்கள், திரைப்படங்கள், திராவிட இயக்க வரலாறு ஆகியவற்றைப் பற்றிய புத்தகங்களை இங்கே வாங்கிச் செல்லலாம் என நினைக்கிறேன். இந்த இடமே ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கிறது. வார இறுதியில் நண்பர்களையும் அழைத்து வரலாமென இருக்கிறேன்' என்கிறார், புத்தகக் காட்சிக்கு வந்திருந்த 26 வயது ரிஷப்.